**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 34/2017**

**Deposition of Witness for Prosecution : P.W.10**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஆவுடையப்பன்** | Caste | : |
| Father/Husband Name | : **காளியப்பன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(All Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.07.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர குற்ற பிரிவில் உதவி ஆனையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.12.2011 ஆம் தேதியில் உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பு உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். கடந்த 17.12.2011 ஆம் தேதியில் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி ஜெயசித்ரா அவர்கள் பதிவு செய்த உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய குற்ற எண் 176/2011, u/s., 454, 380 IPC ஆக பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையை எனது மேல் விசாரணைக்கு பெற்றுகொண்டு அன்று சம்பவ இடம் சென்று சுமார் 20.00 மணிக்கு சம்பவ சாட்சிகள் ஈஸ்வரன் மற்றும் செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில்

எரிந்து கொண்டிருந்த மின் விளக்கு வெளிச்சத்தில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ. 5 மற்றும் 6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பார்வை மகசரில சாட்சிகளிடம் கையொப்பம பெற்றேன். பின்பு சாட்சிகளான ராமர், மாயக்காள், காசிநாதன், விஜயராணி, கருத்த கண்ணன், நடராஜன், அம்மாவாசி, ஈஸ்வரன், செல்வம் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எனக்கு பணிமாறுதல் வந்தப்படியால் வழக்கு கோப்பை ஆய்வாளர் ராஜேஸ் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் இரவு நேரத்தில் நடந்தது என்றால் சரிதான். சம்பவத்தை கண்ணால் பார்த்ததாக புகாரில் சங்கதிகள் இடம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வீட்டில் இருந்த பீரோவில் உள்ள அலமாறி உடைக்கப்பட்டிருந்தது. சூரியன் அஸ்தமான பிறகு சூரியன் உதயம் ஆகுவதற்கு முன்பாக வீட்டின் ஏதாவது ஒரு வழியாக உடைத்து சென்றிருந்தால் இதச 457, 380 வழக்காக பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். நான் விசாரித்தபோது முதல் தகவல் அறிக்கையின்படி இதச 454, 380 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. சம்பவம் 17.12.2011 ஆம் தேதியில் இரவு 01.00 மணியிலிருந்து காலை 07.30 மணிக்குள் நடந்ததாக ஆவணங்களில் உள்ளது. 17.12.2011 ஆம் தேதியில் இரவு 20.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வரைபடமும் பார்வை மகசரும் நான் சம்பவ இடம் செல்லாமல் நிலையத்திலேயே வைத்து கொண்டு தயாரித்து நான் முதல் விசாரணையை முடித்துள்ளேன் என்றால் சரியல்ல.